DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.163/2019**

Deposition of Witness : PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முனீஸ்வரன் | Father's Name | : | ராமதாஸ் |
| Village | : | வடபுதுப்பட்டி | Taluk | : | பெரியகுளம் |
| Caste | : | | Calling | : | கொத்தனார் |
| Religion | : | | Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 25-03-2024.

---

முதல் விசாரணை–

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவைகள் தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ–1, ஊனச்சான்றிதழின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ–2, 20–12–2018 முதல் 28–12–2018 காலகட்டத்திற்கான தற்காலிக மருத்துவரசீது ஆட்சேபணையுடன் ம.சா.ஆ–3, மருத்துவ ரசீதுகளின் கோர்வை ஆட்சேபணையுடன் ம.சா.ஆ–4, ஸ்கேன் பிலிம்களின் கோர்வை ம.சா.ஆ–5, TN 60 L 9666 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ–6, TN 60 D 2463 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ–7, குற்ற இறுதி அறிக்கையின் சான்றிட்டநகல் ம.சா.ஆ–8, எனது மகனின் ஆதார் அட்டையின் நகல் ம.சா.ஆ–9, எனது மகனின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல்பக்கத்தின் நகல் ம.சா.ஆ–10, எனது மகனின் பொறியியல் படிப்பு முடித்தற்கான சான்றிதழ் மற்றும் அதன் இணைப்புகள் ஆட்சேபணையுடன் நகல் ம.சா.ஆ–11, எனது ஆதார் அட்டையின் நகல் ம.சா.ஆ–12, எனது வங்கி கணக்கு புத்தகத்தின் முதல்பக்கத்தின் நகல் ம.சா.ஆ–13. விபத்தில் ஏற்பட்ட காயங்களினால் எனது மகன் சாட்சியம் அளிக்க முடியாத நிலையில் உடல்நிலை

பாதிக்கப்பட்டு இருந்துவருவதால் இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன். மனுப்படி தீர்ப்பாகுமாறு பிரார்த்திக்கிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

*Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.*

V SURESH

Digitally signed by V SURESH
Date: 2024.03.25 15:02:31 +0530

Chief Judicial Magistrate,
Theni.